# 2.6 நான் வரலாறு எழுதுகிறேன்.

**இலக்கு**

*குடிபெயர்வுக் கதை, மற்றும் இரு பண்பாட்டு இரு மொழி ஆற்றல்களிலிருந்து கிடைக்கும் வளங்கள் பற்றிய தெளிவை மாணவர்களுக்கு ஏற்படுத்தல். இந்த மாணவர் தமது ஒவ்வோர் நாள் வாழ்க்கையிலும் இந்த வளங்களை எவ்வாறு பயன்படுத்த முடியும் எனக் காட்டுவர்.*

வகுப்பு 1 - 9 | 30 - 60 மணித்துளிகள்



**கருவிகள்:**
தாள் கீற்றுகள்,
சுவரொட்டித்தாள்

**குறிப்புகள்:**

இங்கு நினைவுபடுத்தப்படும் மற்றும் தொடர்புபடுத்தப்படும் காட்சிகள் மீளவும் நாடகங்களாக நடிக்கப்படும். ஒவ்வொரு காட்சி முடிவிலும் அதன் உள்ளடக்கம் மற்றும் அளிக்கை பற்றிய பின்னூட்டலை பார்வையாளர் நடிகர்களுக்கு வழங்குவர்.

---

**நடைமுறை:**

- அறிமுகமாக, ஆசிரியர் தனது இருபண்பாட்டு இருமொழி ஆற்றல்களுடன் குடிபெயர்வு தன்வரலாற்றை எப்படி ஒரு வளமாகப் பயன்படுத்தினார் என்பதை எடுத்துக்காட்டுடன் மாணவர்க்கு வழங்குவார். மேலும் கதைப்பகுதிகள் மாணவர்களுடன் உருவாகும். எடுத்துக்காட்டு: "வரும் வழியில் விமானநிலையத்தில் ஒருவருக்கு காவல் துறையினருடன் தொடர்புகொள்ள உதவி செய்தேன். ஏனெனில் என்னால் மொழிபெயர்க்க முடியும்" "எனது சமயம் பற்றிய இருவரின் உரையாடலில் துணிவுடன் கலந்துகொண்டேன். ஏனெனில் நான் அந்தச் சமயத்தின் ஓர் உறுப்பினன்." "இரு வேறு பண்பாட்டுப் பின்னணியில் வந்த இருவரது தவறான விளக்கத்தை பார்த்ததினால் அதில் என்னைத் தொடர்புபடுத்தி அவர்களுக்கு வேண்டிய விளக்கம் கொடுத்து துணைசெய்ய முடிந்தது."
- தொடர்ச்சியாக, மாணவர் மற்றைய தம் பட்டறிவுகளை நினைவில் கொண்டு (அல்லது தங்கள் சூழலில் இருந்து வருபவரின் பட்டறிவுகளை) ஒரு தாளின் கீற்றில் எழுதுவர்.
- வகுப்பு மாணவர் முழுமையுமாக (அல்லது இரு குழுக்களாக) வட்டமாக நின்று கீற்றை உரத்துப் படித்துக் குறிப்புகள் சொல்லி அவை "எனது குடிபெயர்வு வளங்கள்" அட்டையில் ஒட்டப்படும். எடுத்துக்காட்டாக: "நான் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் பேசுகிறேன். அதனால்தான் என்னால் நடுநிலை வகிக்கமுடிகிறது." "இரண்டு நாட்டு மக்களுடன் என்னால் தொடர்பு கொள்ள முடியும்" "எனக்குப் பல வசிப்பிடங்கள் உள்ளது, அங்கெல்லாம் நண்பர்களும் உள்ளனர்." "என் தாய் நாட்டு விழாக்கள், இங்கு கொண்டாடப்படும் விழாக்கள் என இரண்டுமுறை நான் கொண்டாடுவேன்", "மற்றவர் அறியாத பல கதைகளை நான் அறிவேன்" முதலியன.
- மேலும் தலைப்பின் ஆராய்வு / தொடர்ச்சி: (வீட்டு வேலை ஒப்படைகளுக்கு மிகப் பொருத்தமானது) "தன் உருவ மாதிரிகளின் ஒளிப்படம்": மாணவன் / மாணவி அவர்களுக்கு இன்றியமையாத பத்து இடங்களில் தம் படங்களைத் தாமே எடுப்பர் (செல்பிகள்). இப் படங்களின் வழியாக அடையாளாப்படுத்தப்பட்ட இடங்கள் ஆவணப்படுத்தப்பட்டு மற்றும் வளங்கள் வெளிப்படுத்தப்பட்டு, அட்டையில் காட்சிப்படுத்தப்படும்.